# 21.SITUATION RELATED PROBLEMS [SITTING ARRANGEMENT]

வழிமுறை (வினா எண் : 1 – 4) கீழ்க்காணும் தகவல்களின் அடிப்படையில் வினாக்கள் 1 முதல் 4 வரை விடையளிக்கவும்.

அகிலன், நிலவன், வளவன், முகிலன், விமலன் மற்றும் மாறன் ஆகியோர் வட்ட வடிவில், சமதூரத்தில் ஒருவரை யொருவர் பார்த்த வண்ணம் அமர்ந்துள்ளனர்.

1) முகிலன், வளவனுக்கு நேர் எதிராகவும் மற்றும் விமலனுக்கு இடப் பக்கமாக இரண்டாவதாக உள்ளார்.

2) மாறனுக்கு நேர் எதிரே நிலவன் உள்ளார்.

3) அகிலனுக்கு வலப்பக்கத்தில் முகிலன் உள்ளார்.

4) விமலனுக்கு அருகில் நிலவன் அமரவில்லை.

1) விமலனுக்கு இடப்பக்கமாக அமர்ந்திருப்பவர் யார்?

1) மாறன் 2) வளவன்
3) நிலவன் 4) அகிலன்

2) வளவனுக்கு வலப்பக்கமாக அமர்ந்திருப்பவர் யார்?

1) விமலன் 2) அகிலன்
3) நிலவன் 4) முகிலன்

3) முகிலனுக்கும், விமலனுக்கும் இடையில் அமர்ந்திருப்பவர் யார்?

1) அகிலன் 2) வளவன்
3) மாறன் 4) எவருமில்லை

4) அகிலனில் இருந்து கடிகாரம் சுற்றும் திசையில் அமர்ந்திருப்பவர் முறையே?

1) முகிலன், மாறன், விமலன், வளவன், நிலவன்

2) நிலவன், வளவன், விமலன், மாறன், முகிலன்

3) முகிலன், நிலவன், விமலன், வளவன், மாறன்

4) மாறன், வளவன், விமலன், நிலவன், முகிலன்

வழிமுறை : (வினா எண். 5 - 9) கீழ்க்காணும் தகவல்களின் அடிப்படையில் விடையளிக்கும்

ரம்யா, ஓவியா, சரண்யா, காவியா மற்றும் இனியா வட்டவடிவில் அமர்ந்துள்ளனர்,

1) இனியாவுக்கும், சரண்யாவுக்கும், இடையில் ரம்யா அமர்ந்து உள்ளார்.

2) காவியாவுக்கு இடப்பக்கம் ஓவியா அமர்ந்து உள்ளார்.

3) ரம்யா, ஓவியாவுக்கு வலப்பக்கம் மூன்றாவதாக உள்ளார்.

4) சரண்யாவுக்கு இடப்பக்கம் காவியா அமர்ந்து உள்ளார்.

5) ரம்யாவுக்கும், ஓவியாவுக்கும் இடையில் இருப்பவர் யார்?

1) சரண்யா 2) காவியா
3) இனியா 4) எவருமில்லை

6) இனியாவுக்கு உடனடி வலப்பக்கம் இருப்பவர் யார்?

1) காவியா 2) ரம்யா
3) சரண்யா 4) ஓவியா

7) ஓவியாவுக்கும், சரண்யாவுக்கும் இடையில் இருப்பவர்?

1) இனியா 2) காவியா
3) ரம்யா 4) எவருமில்லை

8) ரம்யாவுக்கு வலப்பக்கம் இரண்டாவதாக இருப்பவர் யார்?

1) இனியா 2) ஓவியா
3) காவியா 4) சரண்யா

9) காவியாவிடமிருந்து இடது புறம் உள்ளவர்களின் வரிசை

1) சரண்யா, ரம்யா, இனியா, ஓவியா
2) ஓவியா, இனியா, ரம்யா, சரண்யா
3) சரண்யா, இனியா, ரம்யா, ஓவியா
4) ஓவியா, ரம்யா, இனியா, சரண்யா

வழிமுறை (வினா எண் : 10 – 14)

A, B, C, D, E மற்றும் F ஆகியோர் வட்ட மேசையில் ஒருவரையொருவர் பார்த்தவண்ணம் அமர்ந்துள்ளனர்.

i) C என்பவர் A மற்றும் E க்கு இடையில் உள்ளார்.

ii) B என்பவர் D மற்றும் F க்கு இடையில் உள்ளார்.

iii) E மற்றும் D நேர் எதிரே உள்ளனர்.

iv) B க்கு உடனடி வலப்பக்கம் F உள்ளார்.

10) C க்கு உடனடி வலப்பக்கம் இருப்பவர் யார்?

1) A 2) E
3) D 4) B

11) A க்கு வலப்புறம் இரண்டாவதாக உள்ளவர் யார்?

1) D 2) B
3) F 4) E

12) B க்கு நேர் எதிரே இருப்பவர் யார்?

1) A 2) E
3) C 4) D

13) F க்கு நேர் எதிரே இருப்பவர் யார்?

1) D 2) C
3) B 4) A

14) E க்கு உடனடி இடப்பக்கம் உள்ளவர் யார்?

1) F 2) C
3) A 4) D

வழிமுறை (வினா எண் : 15 – 18)

கொடுக்கப்பட்ட சூழ்நிலைகளுக்கு உட்பட்டு வினா எண்.15 முதல் 18 வரை விடையளிக்கவும். A, B, C, D, E, F ஆகியோர் வட்ட வடிவில் அமர்ந்துள்ளனர். B ஆனவர் F மற்றும் C க்கு இடையிலும் A ஆனவர் E மற்றும் D க்கு இடையிலும், F ஆனவர் D க்கு இடப்பக்கத்திலும் அமர்ந்துள்ளார். எனில்,

15) A க்கும் F க்கும் இடையில் அமர்ந்துள்ளவர் யார்?

1) D 2) B
3) E 4) C

16) B க்கும், C க்கும் இடையில் அமர்ந்துள்ளவர் யார்?

1) A
2) எவருமில்லை
3) D
4) E

17) E க்கு வலப்பக்கம் அமர்ந்துள்ளவர் யார்?

1) A
2) C
3) B
4) D

18) E க்கு இடப்பக்கத்தில் அமர்ந்துள்ளவர் யார்?

1) A
2) C
3) B
4) D

A, B, C, D, E, F ஆகியோர் வட்ட வடிவில் அமர்ந்துள்ளனர். A என்பவர் D யின் நேர் எதிரே அமர்ந்துள்ளார். A மற்றும் B க்கும் இடையில் C அமர்ந்துள்ளார். E மற்றும் A க்கும் இடையில் F அமர்ந்துள்ளார். F ஆனவர் E க்கு இடப்பக்கத்திலும் அமர்ந்துள்ளனர்.

19) B க்கு இடப்பக்கம் அமர்ந்துள்ளவர் யார்?

1) A
2) C
3) D
4) E

வழிமுறை : P, Q, R, S, T ஆகியோர் வட்ட வடிவில் அமர்ந்துள்ளனர். T யின் இடதுபுறம் R அமர்ந்துள்ளார். S மற்றும் T க்கு இடையில் P அமர்ந்துள்ளார். R க்கு இடப்பக்கம் அமர்ந்துள்ளவர் யார்?

1) P
2) Q
3) S
4) T